2025 ஜீலை மாதம் 29 – ஆம் தேதி செவ்வாய்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

எம் .சி .ஓ .பி. நெம்பர் : 209 /**2022**

2025–ஆம் ஆண்டு ஜீலை மாதம் 29 – ஆம் தேதி செவ்வாய்கிழமை 3 ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய Rw1 நபரின் வாக்குமூலம் (1969–ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.ட.சுபத்ரா, கிரேடு I பென்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | RW1 – ஜீன்டோ மேத்யூ |
| தகப்பனார் பெயர்: | மத்தாயி. |
| ஊர்: | ராஜகுமாரி |
| வட்டம்: | இடுக்கி. |
| மாவட்டம்: | இடுக்கி. |
| தொழில்: | –. |
| வயது : | 34 |

தேதி : 29.07.2025.

முதல் விசாரணை: –

(இந்நீதிமன்றத்தில் தட்டசராக பணிபுரியும் திரு,கண்ணன் என்பவர் மலையாலமொழி அறிந்து நன்கு பேசகூடியவர் என்பதால் அவர் மூலமாக மலையாளத்தில் சாட்சியிடம் கேள்வி கேட்கப்பட்டு அதற்கு அவர் அளித்த பதில்

தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டது. மேற்படி விசாரணைக்கு இரு தரப்பிலும் எவ்வித ஆட்சேபனை இல்லை என்று எடுத்துரைதத்தன் பேரில் விசாரணை மேற்கோள்ளப்பட்டது).

நான் இந்த மனுவில் 3ம் எதிர் மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். நான் இவ்வழக்கில் 1ம் எதிர்மனுதாரர் ஆவேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.

**3ம் எதிர்மனுதாரர் தரப்பில் முதல் விசாணை–**

KL56N5694 என்ற ஆம்புலன்ஸ் வாகனத்தின் டிரைவராக இருந்தேன் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் ஆம்புலன்ஸ் வாகனத்தை நான் எந்த இடத்திலிருந்து எந்த இடத்திற்கு ஓட்டி சென்றேன் என்றால் கேரளா மாநிலத்திலுள்ள முட்டுகாடு என்ற இடத்திலிருந்து தமிழ்நாட்டில் உள்ள தேனி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் வாகனத்தை ஓட்டி வந்தேன். விபத்து சமயத்தில் நான் ஆம்புலன்ஸ் வாகனத்தை எவ்வாறு ஓட்டி வந்தேன் என்றும், ஆம்புலன்ஸ் வாகனத்தை ஓட்டி வரும் போது சைரன் ஒலிக்க செய்து வந்தேனா என்றும் கேட்டால் நான் நார்மல் ஸ்பிடில் வந்தேன். சைரனை ஒலிக்கச் செய்து வந்தேன். சுமார் 5 வருடங்களுக்கு முன்னால் நான் காலை 08.00 மணிக்கு முட்டுகாடுலிருந்து ஆம்புலன்ஸ் வாகனத்தை எடுத்துக்கொண்டு வந்த போது சுமார் 10.00 மணிக்கு விபத்து நடந்தது. விபத்து சமயத்தில் இரு சக்கர வாகனத்தில் 3 நபர்கள் வந்தார்கள். அவர்கள் ஹெல்மேட் அணியவில்லை. நான் ஆம்புலன்ஸ் வாகனத்தை பிரேக் போட்டு நிருத்திய பிறகு இரு சக்கர வாகனத்தில் வந்தவர்கள் ஆம்புலன்ஸ் மீது மோதி பைக்குடன் கீழே விழுந்து விட்டனர். இந்த விபத்து சம்பந்தமாக தேனி போலிசார் யார் மீது வழக்கு பதிவு செய்தார்கள் என்றால் இறந்து போன தங்கராஜ் என்பவர் மீது வழக்கு பதிவு செய்தார்கள். விபத்திற்கு யார் காரணம் என்றால் இரு சக்கர வாகனத்தை ஓட்டி வந்தவர் தான் காரணம் ஆவார். எனது ஓட்டுநர் உரிமத்தின் ஜெராக்ஸ் நகல் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது. அது எ.ம.சா.ஆ.1 ஆகும்.

## மனுதார் தரப்பில் குறுக்கு விசாரணை:

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். டிரைவராக எத்தனை வருடங்கள் பணி புரிந்துள்ளேன் என்றால் 8 வருடமாக டிரைவர் பணி செய்து வந்தேன். தற்போது 2 வருடமாக டிரைவர் பணி செய்யவில்லை. ஓட்டுநர் உரிமம் எந்த வருடத்தில் பெற்றேன் என்றால் 2008 ம் வருடத்தில் ஓட்டுநர் உரிமம் பெற்றேன். நான் எனது ஆம்புலன்ஸ் வாகனத்தில் வந்தவர்களை எந்த மருத்துவமனையிலிருந்து அழைத்து வந்தேனா அல்லது தனிப்பட்ட முறையில் அழைத்து வந்தேனா என்றால் இராஜகுமாரி தேவ மாதா மருத்துவமனயிலிருந்து நான் எனது ஆம்புலன்ஸ் வாகனத்தில் அவர்களை ஏற்றி கொண்டு வந்தேன். ராஜகுமாரியிலிருந்து தேனிக்கு எத்தனை கிலேமீட்டர் என்றால் 72 கிலேமீட்டர். நான் சைரன் வைத்து ஆம்புலனசை ஓட்டியதால் 120 கீலேமீட்டர் வேகத்தில் ஆம்புலன்ஸ் ஒட்டி வந்தேன் என்றால் ஆம்புலன்ஸ் அதிக பட்சம்90 கீலேமீட்டர் வேகம் வரை செல்லும் ஆனால் நான் 45 கீ.மி வேகத்தில் ஓட்டி வந்தேன். நான் 45 கி.மீ வேகத்தில் ஆம்புலன்ஸ் வாகனத்தை ஓட்டி வந்ததாக செல்வது பொய் என்றால் சரியல்ல. இரு சக்கர வாகனத்தில் வந்தவர்கள் சாலை விதிகளை கடைபிடித்து யூடர்ன் செய்து மெதுவாக வாகனத்தை ஓட்டி வந்தார்கள் என்றும் நான் தான் ஆம்புலன்ஸ் வாகனத்தை அதிவேகமாகவும், அஜாகிரதையாகவும் ஓட்டிவந்து இரு சக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்திவிட்டேன் என்றும் விபத்திற்கு நான் தான் காரணம் என்று சொன்னால் சரியல்ல. நான் ஆம்புலன்ஸின் சைரனை ஒலிக்காமல் அதிகவேகமாகவும், அஜாகிரதையாகவும், ஆம்புலன்சை ஓட்டி வந்து இருசக்கர வாகனத்தின் மீது மோதியதால் எனது வாகனத்தின் முன் வலது பக்க முகப்பு விளக்கு, பம்பர் ஆகியவற்றில் சேதம் ஏற்பட்டது என்றும், அதன் அடிப்படையில்தான் மோட்டார் வாகன ஆய்வறிக்கை வழங்கப்பட்டுள்ளது என்றால் எனது ஆம்புலன்ஸ் வாகனத்தில் வலது பக்க கெட்லைட் சேதம் ஆகிவிட்டது , இரு சக்கரவாகனத்தின் கேன்டில் பார் எனது ஆம்புலன்சின் முகப்பு விளக்கின் மீது இடித்து விட்டதால் சேதமானது. மேற்படி நான் சொன்ன விபரத்தை போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். நான் போலிசாரிடம் எழுத்து மூலமாக புகார் எதுவும் எழுதிக்கொடுத்தேனா என்றால் நான் எழுதி கொடுக்கவில்லை, எனது ஆம்புலன்ஸ் வாகன உரிமையாளர் புகார் கொடுத்தார். இரு

சக்கர வாகனத்தின் கேன்டில் பார் எனது ஆம்புலன்ஸ் கெட்லைட் மீது இடித்தாக சொல்லியுள்ள சங்கதியை போலிசார் விசாரணையில் நான் சொல்லவில்லை. நான் ஆம்புலன்ஸ் வாகனத்தை பிரேக் போட்டு நிறுத்தியபிறகு இருசக்கர வாகனத்தில் வந்தவர்கள் எனது ஆம்புலன்ஸ் மீது மோதியதாக நான் சொல்லியுள்ள சங்கதியை போலிசார் விசாரணையில் சொல்லவில்லை. நான் ஆம்புலன்ஸ் வாகனத்தின் சைரனை ஒலிக்காமலும் அதிவேகமாகவும், அஜாகிரதையாகவும், ஓட்டி வந்து இரு சக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதால் தங்கராஜ் தலையில் காயம் ஏற்பட்டு பின்னர் இறந்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்திற்கு நான் தான் முழுகாரம் என்றும், தங்கராஜ் கிடையாது என்றும் சொன்னால் சரியல்ல. நான் பின்னிட்டு யோசனை செய்து சாட்சியம் அளிக்கிறேன் என்றும், உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. ஆம்புலன்ஸ் டிரைவர் மீது வழக்கு பதிவு செய்யாமல் சிறிய வாகனமான இரு சக்கர வாகனத்தை ஓட்டி வந்த தங்கராஜ் மீது வழக்கு பதிவு செய்தது சட்டப்படி ஏற்க தகுந்ததல்ல என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 29.07.2025 அன்று செவ்வாய்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SANKAR Digitally signed by SANKAR
Date: 2025.07.30 18:03:40 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி(FAC). தேனி.
29.07.2025